உத்தரவு போட்டிருக்கிறார்கள். இவ்வாறு போடுவது சரிதானா? அந்தந்த சமயத்திற்குத் தேவையான பைப்புகளை டெண்டர் கோரி வாங்குவதுதான் முறையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தக் கேள்வியில் குறிப்பிட்டிருப்பது, ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டதா என்பதுபற்றி. நான் சொன்னேன், ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்க வேண்டும் என்று உத்தரவு போடப்படவில்லை என்று. அங்கு என்ன நடந்தது என்றால் ஊராட்சி ஒன்றியங்கள். ஜி.ஐ. பைப்ஸ் வாங்குவது என்பது ஒன்றிய வாரியாக டெண்டர் வைத்து வாங்குவது. ஆனால் அந்த மாவட்டத்தின் கோட்டப் பொறியாளர் அவர்கள் ஒரு ஒன்றியத்திற்கு என்று டெண்டர் வாங்குகிறபோது விலை அதிகமாகிறது என்றும் ஒரு மாவட்டத் திற்கு அல்லது அவர்களது பகுதியில் இருக்கிற எல்லா ஒன்றியங் களுக்கும் சேர்ந்து ஒரு டெண்டர் கேட்கிறபோது விலை குறைகிறது, ஆகவே அவர்கள் அப்படி டெண்டர் கோரினார் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சேர்த்து. அதில் நாகப்பா கம்பெனியின் டெண்டர்தான் லோயஸ்ட் டெண்டர். அதேபோல் மற்ற ஒன்றியங்கள் தனிப்பட்டமுறையில் டெண்டர் கோரியதும் அதிலுள்ள லோயஸ்ட் டெண்டர், நாகப்பா கம்பெனியின் டெண்டர்தான் லோயஸ்ட் டெண்டர். ஆகவே இந்த வசதியை ஒன்றியங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும்தான் அது செய்யப்பட்டிருக்கிறது.

தொட்டியம்—சீனிவாசநல்லூர் சாலை

* 269 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி வட்டம், தொட்டியத்திலிருந்து சித்தூர் வழியாக சீனிவாசநல்லூர் வரை செல்லும் சாலையை செப்பனிட அரசு திட்டமிட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதுவரை நிறைவேற்றப்படாமல் காலதாமதம் ஆவதற்குரிய காரணம் யாது?

1975 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஊரக சாலைத் திட்டத்தின் மூன்றும் படிவத்தில் இச்சாலையை மேம்பாடு செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லாததால் ஊரக சாலை திட்டத்தின் மூன்றும் படிவத்தில் "மேம்பாடு செய்தல்" என்ற தலைப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேலைகளை உடனே எடுத்து செய்ய இயலாத நிலை உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தொட்டியம்—சீனிவாசநல்லூர் வரை செல்கிற சாலை தற்போது மேலும் பழுதடைந்திருக்கிறது. அங்கு கார் அல்லது வண்டி போக முடியாத நிலைமை தற்போது இருந்துவருகிறது. ஆகவே, கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து விரைவிலே இதை நிறைவேற்றித் தர அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தச் சாலை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கான சாங்க்ஷன் எல்லாம் ஆகியிருக்கிறது. அவர்கள் இந்தச் சாலையை அனுதாபத்தோடு கவனிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதேபோல் அரசாங்கத்திற்கு இருக்கிற நிதி நெருக்கடியையும் அவர்கள் அனுதாபத்தோடு கவனிக்கவேண்டும்.

திரு சீ. க. வடிவேலு: இரண்டு மாதங்களுக்கு முன் இத்திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறது என்றும் அடுத்த ஆண்டு இத் திட்டம் நிறைவேற்றப்படும் என்றும் அரசாங்கத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. இதுவரையில் தொட்டியம் பக்கத்தில் ஒரு அடி கூட ரோட் வொர்க்ஸ் செய்யப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து தொட்டியம்—சீனிவாசநல்லூர் சாலையைப் போட முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில்தான் அரசு இதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. போதுமான நிதி வசதி ஏற்பட்டவுடன் இந்த வேலை மேற்கொள்ளப்படும்.